

பாடம் 4

அக்டோபர் 19-25

# இயேசுவை மேசியா என்று சொன்ன சாட்சிகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 1:19–23; ஏசா 40:1–5; யோவான் 1:29–37; ரோம 5:6; யோவான் 1:35–39; 1:43–51; 3:1–21.

**மனன வசனம்:** இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 3:3.

'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்பது உட்பட, இயேசு தம்மைப்பற்றிச் சொன்ன அறிக்கைகளை நிரூபிக்கிற வகையில், வேதாகமத்திலிருந்து வல்லமையான ஆதாரங்களை மக்களுக்குக் காண்பித்து வந்தார். யோவான் 6:47.

அதற்கு மேலும் செய்தார்: தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார்; சில அப்பங்களை வைத்து ஆயிரக்கணக்கானோரைப் போஷித்தார்; ஒரு பிரபுவின் மகனைக் குணமாக்கினார்; பெதஸ்தா குளத்தருகே ஒரு வியாதியஸ்தனைக் குணமாக்கினார்; ஒரு பிறவிக்குருடனுக்குப பார்வை கொடுத்தார்; மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினார். இயேசு யார் என்பது குறித்துச் சாட்சியிடுவதற்குச் சுவிசேஷகர் பல நிகழ்வுகளையும், யூதர், புறஜாதியார், பணக்காரர், ஏழைகள், ஆண்கள், பெண்கள், அதிகாரிகள், சாமானியமக்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று பல மக்களையும் எடுத்துக் கையாளுகிறார்.

பிதாவின் சாட்சியையும், வேதாகமத்தின் சாட்சியையும்கூட யோவான் சுட்டிக்காட்டுகிறார்; அனைத்தும் இயேசு யாரென்பதற்குச் சான்றாக உள்ளன.

இந்த வாரம் யோவான் ஸ்நானனின் வல்லமையான சாட்சியுடன் ஆரம்பிப்போம். வேறே சாட்சிகளும் உண்டு; அதாவது அந்திரேயா, சீமோன் பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல், முற்றிலும் எதிர்பாராத சாட்சியான நிக்கொதேமு என்கிற பரிசேயர் போன்றோர். திரைமறைவில் இருக்கிற இன்னொரு சாட்சியும் உண்டு. யோவான் 1:35இல், அந்திரேயாவுடன்கூட நின்ற மற்றொரு சீடன்; அது வேறு யாருமல்ல, யோவான்தான்.

*2024 அக்டோபர் 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# யோவான் ஸ்நானனின் சாட்சி

கடந்த வாரப் பாடத்தில் பார்த்ததுபோல, யோவான் சுவிசேஷம் வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவானவர் சிருஷ்டிப்புக்கு முன்னரே இருந்தவர் என்கிற உண்மையுடன் துவங்குகிறது. ஆனால் அதே முன்னுரையில், இயேசுவைப் பற்றிப் பேசுகிற சாட்சியாக யோவான் ஸ்நானன் காட்டப்படுகிறார். இயேசுவின் காலத்திலிருந்த சில யூதர்கள், ஆசாரியராக ஒரு மேசியாவும், ராஜாவாக ஒரு மேசியாவும் என இரண்டு மேசியாக்கள் வரப்போவதாக எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் யோவான் ஸ்நானன் தன்னை இந்த மேசியாக்களில் ஒருவராக அறிவிக்கவில்லை, மாறாக மெய்யான ஒரே மேசியாவின் சாட்சியாக இருந்தாரென யோவான் தெளிவாகக் கூறுகிறார்.

**யோவான் ஸ்நானன் தன் ஊழியம்பற்றியும் ஊழியநோக்கம்பற்றியும் யோவான் 1:19-23இல் எவ்வாறு விளக்குகிறார்?**

---

யோவானைப்பற்றிவிசாரிப்பதற்குஆசாரியர்களையும்லேவியர்களையும் மததலைவர்கள் அனுப்பினார்கள். யூதேயாவில் மேசியாகுறித்த எதிர்பார்ப்புகள் பலமாக இருந்ததால், அந்த எதிர்பார்ப்புகள் சம்பந்தமாக யோவான் ஸ்நானன் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது. தான் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சியிடவும், மேசியாவின் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ணவும் தேவனால் அனுப்பப்பட்டவன் என்று சொன்னார். யோவான் 1:6-8. அதனால் அவர்களிடம், 'நான் கிறிஸ்து அல்ல' என்று மிகத்தெளிவாகப் பதிலளித்தார். யோவான் 1:20.

யோவான் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுத்தார்; ஆனால் கிறிஸ்து ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கவிருந்தார். யோவான் 1:26,33. அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்குக்கூட யோவான் பாத்திரனாக இருக்கவில்லை. யோவான் 1:27. யோவானைவிட இயேசு கிறிஸ்து மேலானவர், ஏனென்றால், அவர் யோவானுக்கும் முன்னிருந்தவர். யோவான் 1:30. இயேசு தேவனுடைய குமாரன்; அதையே யோவானும் சுட்டிக்காட்டினார். யோவான் 1:34.

**ஏசா 40:1-5இன் வசனங்களை யோவான் ஸ்நானன் எவ்வாறு பயன்படுத்துகிறார்? யோவான் 1:23.**

சாலைகள் கரடுமுரடாகவும், பாறைகள் நிறைந்தும் இருந்த நாட்களில், ராஜா சௌகரியமாகப் பயணம் செய்வதற்கு அவற்றைச் சமப்படுத்தவும், கூரான திருப்பங்கள் இருந்தால், அவற்றைச் சரிசெய்யவும் வேலையாட்களை முன்னராக அனுப்பிவைப்பார்கள். அவ்வாறு, தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, மக்களுடைய இருதயத்தை இயேசுவுக்காக ஆயத்தம்பண்ணும்படி யோவான் வந்தார்.

---

**யோவான் செய்த அதே ஊழியத்தை, செவந்த்-டே அட்வென்டிஸ்ட்டுகளாகிய நாம் எவ்வாறு செய்ய வேண்டும்? என்னென்ன ஒற்றுமைகள் உள்ளன?**

# தேவ ஆட்டுக்குட்டி

ரோமர்களிடமிருந்து தங்களை விடுவிக்கிற ஒரு மேசியாவை எபிரெய தேசம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. யோவான் சுவிசேஷத்தின் நோக்கமே, மேசியாகுறித்த அவர்களது புரிதலை மாற்றுவதும், அதன்மூலம் வரவிருந்த ராஜாவைப் பற்றின தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுலை இயேசுவில் காணச் செய்வதுமாகும். மேசியா பூலோக அரசராக இருக்கவில்லை. அவர் தம்மைப் பற்றின பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வந்தார்; உலகத்திற்காக அவர் தம்மையே பலியிடுவதும், தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே உள்ள உறவைப் புதுப்பிப்பதும் அதில் அடங்கும்.

**இயேசுவைப் பற்றி யோவான் ஸ்நானன் சொன்னது என்ன? யோவான் 1:29-37. இயேசுவைச் சித்திரிக்க என்ன உருவகத்தைப் பயன்படுத்துகிறார், இயேசுவைவும், அவரது ஊழியத்தையும் புரிந்துகொள்ள அது எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது?**

---

---

இயேசுவை, தேவஆட்டுக்குட்டி என்று ஸ்நானன் சொல்லுவது, யோவான் சுவிசேஷத்தின் நோக்கத்திற்கு உறுதுணையாக உள்ளது; ஏனென்றால், மேசியா வின் தன்மை, அவரது பணிகுறித்த ஒரு புதிய புரிதலைக் கொடுப்பதே அப்புத்த கத்தின் நோக்கம். மெய்யாக இயேசுதாம் வாக்குறுதியின் நிறைவேறுதலாக இருந்தார்; ஆதி 3:15இல் முதன்முதலாக மீட்பரைக் குறித்த அந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டது.

இயேசுவின் ஞானஸ்நானத்தில் அவரை, தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் சுட்டிக்காட்டியபோது, மேசியாவின் பணி குறித்த ஒரு புதிய வெளிச்சம் கிடைத்தது. அந்தத் தீர்க்கதரிசியின் மனதில், ‘‘அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டி’’ எனும் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. ஏசா 53:7.

**இயேசு, ‘தேவ ஆட்டுக்குட்டியாக’ இருந்ததைப் புரிந்துகொள்ள பின்வரும் வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? மாற்கு 10:45; ரோமர் 5:6; 1பேதுரு 2:24.**

---

---

இயேசுவின் ஊழியம்பற்றி யோவான் ஸ்நானன் இன்னும் அதிகமாக அறியவேண்டியிருந்த போதிலும், இயேசுதாம் வாக்குரைக்கப்பட்ட மேசியா, தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக வந்தவர் என்பதில் யோவான் ஸ்நானன் உறுதியாக இருந்தார்.

---

**‘தேவ ஆட்டுக்குட்டி’ என்று இயேசு அழைக்கப்படுவதுபற்றி ஆழமாகத் தியானியுங்கள். என்ன காட்சிகள் மனதில் தோன்றுகின்றன? அதை பழைய ஏற்பாட்டுப் பலிமுறையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது, நம் இரட்சிப்புக்கான மாபெரும் விலையைப் புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?**

# யோவானின் இரண்டு சீடர்கள்

இயேசு நடந்துசென்றபோது யோவான் ஸ்நானனுடன் அவரது இரண்டு சீடர்கள் இருந்தார்கள். அப்போது யோவான், 'இதோ, தேவ ஆட்டுக்குட்டி' என்றார். யோவான் 1:36. கிறிஸ்துவைப்பற்றி யோவான், வரவிருக்கிற மேசியாவைக் குறித்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றப் போகிறவர் என்று பிரசங்கிப்பதை அந்தச் சீடர்கள் கேட்டிருந்தார்கள். யோவான் ஸ்நானனைவிட இயேசு பெரியவரென்றும், யோவான் அவரைப்பற்றிப் பிரசங்கிப்பதையும் உணர்ந்து யோவானைவிட்டு அவர்கள் இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்கள்.

**இயேசுவைப்பற்றி யோவான் சொன்ன சாட்சியைக் கேட்டு இந்த இரு சீடர்களும் என்ன செய்தார்கள்? யோவான் 1:35-39.**

அவர்கள் இயேசுவோடு இருக்க விரும்பி, அந்த நாளை அவருடன் கழித்தார்கள். அப்போது எத்துணை அற்புதமான விஷயங்களை அவர்கள் கற்றிருக்கலாம், அனுபவித்திருக்கலாம்!

நிச்சயம் மகத்தான விஷயங்களாகத்தான் இருந்திருக்கும்! அவற்றைச் சீக்கிரமே மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டிருப்பார்கள். அந்த இரு சீடர்களில் ஒருவரான அந்திரேயா, உடனடியாகத் தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு, 'மேசியாவைக் கண்டோம்' என்றார். யோவான் 1:41. அந்திரேயா தன் சகோதரனை அழைத்து வந்தபோது, அவனைத் தமக்குத் தெரியும் என்பதை இயேசு காண்பித்து, 'நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய்' என்றார். யோவான் 1:42. பேதுருவை இயேசு அறிந்து, புரிந்துவைத்திருந்தார். இயேசுவுக்கு ஒவ்வொரு நபரையும் நன்றாகத் தெரியும் என்பதும் யோவான் சுவிசேஷத்தின் ஒரு முக்கியக் கருத்து. உதாரணமாக, யோவான் 2:24,25.

'யோவானும் அந்திரேயாவும் ஆசாரியர்களைப்போலவும், தலைவர்கள்போலவும் அவிசுவாச ஆவியை உடையவர்களாக இருந்திருந்தால், கற்றுக்கொள்கிறவர்களாக இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருக்க மாட்டார்கள். விமர்சிக்கிறவர்களாகவும் அவரது வார்த்தையை நியாயந்தீர்க்கிறவர்களாகவும் அவரிடம் வந்திருப்பார்கள். ஆனால் இந்த முதல் சீடர்கள் அவ்வாறு செய்யவில்லை. யோவான் ஸ்நானன் பிரசங்கித்தபோது பரிசுத்த ஆவியானவருடைய அழைப்புக்கு இணங்கினார்கள். இப்போது பரலோக ஆசிரியரின் சத்தத்தை உணர்ந்துகொண்டார்கள். பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள்மீது ஒரு தெய்வீக வெளிச்சம் பிரகாசித்தது. சத்தியத்தின் பன்முக் கருத்துகள் புதிய வெளிச்சத்தில் தெளிவாயின'.

யோவான் சுவிசேஷம் முழுவதின் நோக்கம் என்னவென்றால், இயேசு யாரென்கிற நற்செய்தியை உலகத்திற்கு அறிவிக்கும்படி மற்றவர்கள் அவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதே.

---

**உங்கள் வாழ்க்கையை மாற்றியதில் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்திற்கும் எவ்வாறெல்லாம் பங்குள்ளது? இன்னும் என்ன மாற்றங்களைக் காண ஆசைப்படுகிறீர்கள்?**

# பிலிப்பு, நாத்தான்வேல்

**பிலிப்புவுக்கு ஏற்கனவே இயேசுவின்மீது விசுவாசம் இருந்ததுபற்றி அவரது செய்தி வெளிப்படுத்துவது என்ன? யோவான் 1:43-46.**

அந்திரேயா, பேதுருவைப்போல பிலிப்பும் பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர். அவர் தன் நண்பர் நாத்தான்வேலைக் கண்டு, அவரிடம் இயேசுவைப் பற்றிச் சொன்னார். இயேசுவை 'தேவ ஆட்டுக்குட்டி' என்று யோவான் ஸ்நானன் சொல்லியிருந்தார். பேதுருவிடம் அந்திரேயா 'மேசியாவை,' தான் கண்டதாகச் சொன்னார். ஆனால் பிலிப்புவோ மோசேயும் தீர்க்கதரிசிகளும் சொன்னவரென்று இயேசுவைக் குறிப்பிட்டார். அவரை 'நாசரேத்தூரான்' என்று குறிப்பிட்டார். அவர் நாசரேத்பற்றிக் குறிப்பிட்டது அவரது நண்பரில் பலத்த தாக்கத்தை உண்டாக்கியது.

நாசரேத் சிறிய பட்டணம்; அதனால் நாத்தான்வேலுக்கு நம்பிக்கையில்லை. ஒதுக்குப்புறமான ஓர் இடத்திலிருந்து ஒரு ராஜா வர வாய்ப்பில்லை என்று நினைத்தார். தவறான அபிப்பிராயம் மனிதர்களின் உண்மையான மதிப்பைக் காணக்கூடாமல் செய்துவிடும். தப்பெண்ணத்தை அணுகச் சரியான வழி, மேம்பட்ட தத்துவக் கருத்துகளையோ இறையியல் கருத்துகளையோ பேசுவதல்ல, ஒருவரை நேரடியாகவே அந்த உண்மையைக் காணும்படி அழைப்பதுதான் என்பதை இதற்குமுன் நாத்தான்வேலிடம் பேசின பேச்சுகளிலிருந்து பிலிப்பு உணர்ந்திருக்கலாம். அதனால்தான் 'வந்து பார்' என்றார். நாத்தான்வேல் அப்படியே செய்தார். சென்றார்; பார்த்தார்.

**தம்மைப்பற்றி நாத்தான்வேலுக்கு நம்பிக்கை உண்டாகும்படி இயேசு என்ன செய்தார்? யோவான் 1:47-51. நாத்தான்வேலின் எதிர்வினை என்ன?**

---

பிலிப்புவின் அழைப்புக்கு நாத்தான்வேல் எவ்வாறு இணங்கினார் என்கிற விபரம் 46, 47ஆம் வசனங்களுக்கு இடையே இல்லை. ஆனாலும் இயேசுவைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றார். தப்பெண்ணத்தைவிட பிலிப்புடனான நட்பு அதிகமாக இருந்திருக்க வேண்டும்; அந்தக் கணம்முதல் அவரது வாழ்க்கை மாறவிருந்தது.

நாத்தான்வேலைப்பற்றி இயேசு நல்லவிதமாகப் பேசுகிறார்; கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்கிறார். யோவான் 1:47. ஆனால் இயேசுவைப்பற்றி நாத்தான்வேல் சொன்னது அதற்கு நேர்மாறாக இருந்தது. யோவான் 1:46. இதற்கு முன் இயேசுவைச் சந்தித்திராத நாத்தான்வேல், ஆச்சரியத்தோடு பேசுகிறார்.

பிறகு, நாத்தான்வேலை அத்திமரத்தின்கீழே கண்டதாக இயேசு குறிப்பிடுகிறார்; அந்தச் சிறு தகவல் அவருக்குள் நம்பிக்கையை உண்டாக்குகிறது. அந்த மரத்தின்கீழே இருந்து, சத்தியத்தை அறியவேண்டுமென நாத்தான்வேல் ஜெபித்துக் கொண்டிருந்ததை இயேசு தம் தெய்வீகத்தால் கண்டிருந்தார். உடனே இயேசுவை ரபீ என்றும், தேவ குமாரன் என்றும், இஸ்ரவேலின் ராஜா என்றும் நாத்தான்வேல் கூறுகிறார். ஒரு சிறு வெளிப்பாடு எவ்வளவு பெரிய விசுவாச அறிக்கைக்கு வழிநடத்தியதெனப் பாருங்கள்.

# நிக்கொதேமு

**நிக்கொதேமுவின் சாட்சி எவ்வாறு யோவான் சுவிசேஷத்தின் கருத்துக்கு உறு துணையாக இருக்கிறது? யோவான் 3:1-21.**

நிக்கொதேமு இஸ்ரவேலில் கனம்பெற்ற ஒரு போதகர்; சனகெரிம் சங்க உறுப்பினர்; செல்வந்தர். அவரது சாட்சி யோவானின் சுவிசேஷத்தில் முக்கியப் பங்காற்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இயேசுவை 'ரபீ' என்கிறார்; இயேசு செய்த அற்புதங்கள் அவரது தெய்வீக ஊழியத்திற்கு ஆதாரமாக இருப் பதாகச்சுட்டிக்காட்டினார். எனவே, முற்றிலும் உணராத நிலையில் நிக்கொதேமு பேசினாலும், இயேசுவின் மேசியத்துவத்திற்கான ஆதாரத்தைக் கொடுக்கிறார்.

நிக்கொதேமு அந்த அடையாளங்களை இயேசுவின் தெய்வீக அழைப் பிற்கான ஆதாரமாகப் பார்த்தார்; ஆனால், மேசியாகுறித்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின்நிறைவேறுதலாகஇயேசுவைச்சுட்டிக்காட்டுபவைகளாகப் பார்க்கவில்லை. எனவே, சில சந்தேகங்களுடன் நிக்கொதேமு வந்தார்; அந்தக் கட்டத்தில் அவர் இயேசுவே, கிறிஸ்துவென உணர்ந்திருக்கவில்லை.

**நிக்கொதேமுவின் உள்மனதை தம்மால் ஊடுருவிப் பார்க்கமுடியும் என்பதைக் காட்டும்படி இயேசு சொன்னது என்ன? யோவான் 3:3-21.**

---

ஒவ்வொரு நபருடைய இருதயமும் இயேசுவுக்குத் தெரியும். அவர் சம் பந்தமின்றி நிக்கொதேமுவிடம் பேசினதுபோலத் தெரியலாம்; ஆனால் நேரே விஷயத்திற்குச் செல்லுகிறார். புறஜாதிகள்தாம் மனந்திரும்ப வேண்டுமென யூதர்கள் எண்ணியிருந்தார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட தாங்களும்கூட மன மாற்ற அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டுமெனப் பலர் உணரவில்லை. ஒரு வர் எந்த நாட்டையும் அல்லது சபையையும் சேர்ந்தவராக இருக்கலாம், ஆனால் யாரும் இரட்சிக்கப்பட்டவராகப் பிறப்பதில்லை.

யூதர்களின் பாரம்பரியம் அற்புதமானது; அது ஆபிரகாமில் துவங்குகிறது; அதனால் தனித்துவமான பல அனுகூலங்களைப் பெற்றிருந்தார்கள். ரோமர் 3:1,2. ஆனால் அது தன்னில்தானே போதுமானதாக இல்லை. நிக்கொதேமு யோசித்திராத ஒன்றை இயேசு சொன்னார்; அதாவது இஸ்ரவேலில் ஒரு போதக ராகவும் அதிகாரியாகவும் இருந்த அவர், மேலே இருந்து மறுபடியும் பிறக்க வேண்டும் என்றார்.

பிறகு நிக்கொதேமுவின் ஆவிக்குரிய அறியாமையை இயேசு சுட்டிக் காட்டினார்: 'நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாம லிருக்கிறாயா?' யோவான் 3:10. கனம்பெற்ற போதகனாகிய நீ இதை எப்படி அறியாமல் இருந்தாய்? என்று கேட்கிறார். இவ்வாறு கடிந்துகொண்டது அவரைத் திகைக்கச் செய்திருக்கும்.

அப்போது இயேசுவைப்பற்றி நிக்கொதேமுவிடம் பல்வேறு கேள்விகள் இருந்திருக்கலாம்; ஆனால் பிறகு அவர் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவராகக் காணப்பட்டார். யோவான் 19:39.

---

**'மறுபடியும் பிறப்பது' என்றால் என்ன, இயேசு அதை அதிகமாக வலியுறுத்தியது ஏன்?**

# மேலும் படிக்க:

நிக்கொதேமு 'கருத்தியல் விவாதத்திற்காக அல்ல, ஆத்துமா உயிர்ப்பிக்கப்படுவதற்காக வேதவாக்கியங்களை ஒரு புதிய வழியில் ஆராய்ந்தார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்குத் தன்னை அர்ப்பணித்தபோது பரலோக ராஜ்யத்தைக் காண ஆரம்பித்தார்.

"விசுவாசத்தினால் தேவகிருபையைப் பெறுகிறோம்; ஆனால், விசுவாசம் நம் இரட்சகர் அல்ல. அது எதையும் சம்பாதித்துக் கொடுப்பதில்லை. கிறிஸ்துவை நம் கரத்தால் பற்றி, அவரது புண்ணியங்களை நமக்குச் சொந்தமாக்குவதே பாவத்திற்கான தீர்வு. பாவ மன்னிப்பைப் போல மனந்திரும்புதலும் கிறிஸ்துவிடமிருந்தே வருகிறது.

''அப்படியானால், நாம் எவ்வாறு இரட்சிக்கப்படுவோம்? 'சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல' மனுஷகுமாரனும் உயர்த்தப்படவேண்டும்; சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டு, கடிபட்ட ஒவ்வொருவரும் அவரை நோக்கிப் பார்த்து, பிழைக்கலாம். 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'. யோவான் 1:29. சிலுவையிலிருந்து பிரகாசிக்கிற ஒளி, தேவ அன்பை வெளிப்படுத்துகிறது. அவரது அன்பு நம்மை அவரிடம் இழுக்கிறது. அந்த இழுப்பை நாம் எதிர்க்காவிட்டால், இரட்சகரைச் சிலுவையில் அறைந்த பாவங்களிலிருந்து மனந்திருந்தினவர்களாக சிலுவையின் பாதத்தண்டை வழிநடத்தப்படுவோம். அப்போது தேவ ஆவியானவர் விசுவாசத்தினால் ஆத்துமாவில் புதிய ஜீவனை உருவாக்குகிறார். எண்ணங்களும் ஆசைகளும் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். சகலத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்தும்படி கிரியைசெய்கிறவரின் சாயலில் இருதயமும் மனமும் சிருஷ்டிக்கப்படுகின்றன. அப்போது தேவனுடைய பிரமாணம் நம் மனதிலும் இருதயத்திலும் எழுதப்படுகிறது; மேலும் கிறிஸ்துவோடுகூட நாம், 'என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்' என்று சொல்லமுடியும். சங் 40:8 ".[1]

[1] Ellen G. White, The Desire of Ages, pp. 175, 176.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி வந்தார். அவரது ஊழியம், குறைந்தபட்சம் மனிதகண்ணோட்டத்தில் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக இருந்தது? இதற்கான பதிலை யோசிக்கும்போது, ஆவிக்குரிய விஷயங்களில் எதை 'வெற்றி' எனக் கருதுகிறேனென்று உங்களையே கேட்டுப்பாருங்கள்.*

2. *பிறகு, யோவான் ஸ்நானனும்கூட, நியாயமான சில சந்தேகங்களை எழுப்பினார். மத் 11:2,3; லூக் 7:19. எதனால் அந்தக் கேள்விகள் எழும்பின? நம் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவேண்டியதுபற்றி அதிலிருந்து என்ன அறியலாம்?*

3. *மெய்யான சபையில் ஒரு தலைவராக இருந்த, உண்மையில் பலவற்றை அறிந்திருக்க வாய்ப்பிருந்த நிக்கொதேமு போன்ற ஒருவர், மெய்யான விஷயங்களில் ஆவிக்குரிய அறிவில்லாமல் இருந்ததுபற்றி வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அவரது நிலையிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?*

# உஸ்பெகிஸ்தானில் ஜெபத்தின் வல்லமை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

36 வயது நிகோராவை ஆம்புலன்ஸில் வேகமாக மருத்துவமனைக்குக் கொண்டுசென்றார்கள். அவளால் பேசமுடியவில்லை; கைகால்களில் உணர்ச்சியில்லை; விழுங்க முடியவில்லை. அவளக்கு என்ன பிரச்சினையென மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நிகோராவின் நிலை ஒரு மாதத்தில் மேலும் மோசமடைந்தது. ஒரு நாளில் 15 நிமிடங்கள் மட்டுமே அவளால் தூங்கமுடியும். மூளை எப்போதும் விழிப்புடனே இருப்பதாக எக்ஸ்ரே சோதனையில் தெரியவந்தது.மற்றொருமருத்துவர் நிகோராவுக்கு நோய்முற்றிவிட்டதாகவும், இனி எந்த நம்பிக்கையும் இல்லையென்றும் சொல்லிவிட்டார். நிகோராவுக்கு இயேசுவின்மீது நம்பிக்கை கிடையாது; ஆனால் அவளது அக்கம்பக்கத்தினரில் சிலர் அட்வென்டிஸ்டுகள். தீவிர சிகிச்சை பிரிவில் அவளைச் சந்தித்து, சபைப்போதகர் வந்து ஜெபிக்கும்படி அனுமதி கேட்டார்கள். “வேண்டாம், எனக்கு உடல்நிலை சரியில்லை. நான் சுகமானபிறகு வரச்சொல்லுங்கள்” என்றாள். ஆனால் அவர்கள் விடவில்லை. “அவர் வந்து, உனக்காக ஜெபிக்கட்டுமே” என்றார்கள். நிகோரா தயக்கத்தோடு சம்மதித்தாள். ஒரு நாள் கழித்து, போதகரும் அவரது மனைவியும் நிகோராவைப் பார்க்க வந்தார்கள். போதகர் சங்கீதம் 23ஐ வாசித்து, நிகோராவின் நெற்றியில் எண்ணெய் பூசி, ஜெபித்தார். ஜெபித்த பிறகும் நிகோராவுக்கு எந்த மாற்றமும் தெரியவில்லை.

அடுத்த நாள், போதகரும் அவரது மனைவியும் மீண்டும் வந்தார்கள். வேதம்வாசித்து, எண்ணெய் பூசி, ஜெபித்தார். அப்போதும் நிகோராவுக்கு சுகம் கிடைக்கவில்லை. ஆனால் அன்று இரவு அவளால் 15 நிமிடங்களுக்கு பதிலாக பல மணி நேரம் தூங்கமுடிந்தது. மூன்றாவது நாளும் போதகரும் அவரது மனைவியும் வந்தார்கள். வேதாகமத்திலிருந்து வாசித்து, எண்ணெய்பூசி, ஜெபித்தார்கள். அப்போதும் அவளுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை. ஆனால் அன்று, இரவு முழுவதும் தூங்கினாள். அதன்பிறகு ஒவ்வொரு நாளும் நன்றாகத் தூங்கினாள். போதகரும் அவரது மனைவியும் தொடர்ந்து அவளைச் சந்தித்தார்கள். நிகோராவால் பேசவும் முடிந்தது. கை கால்கள் செயல்படத் தொடங்கின. அவளது மூளை செயல்பாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்பின. மருத்துவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

“இவ்வளவு சீக்கிரத்தில் நீ குணமானதை என்னால் நம்பவே முடியவில்லையே” என்று சொன்னார். போதகர் ஜெபிக்க ஆரம்பித்து நான்கு மாதங்களுக்கு பிறகு, நிகோராவால் கார் ஓட்டி, வேலைக்குச் செல்லமுடிந்தது. தேவனை நம்பாமல் இருந்தவர், “தேவனே எனக்கு இந்த அற்புதத்தைச்செய்தார்” என்றுசொன்னார். தனக்கு உதவிய அக்கம்பக்கத்தினரையும் நன்றியோடு நினைவுகூர்ந்தார். “குடும்பம்போன்ற நண்பர்களை தேவன் எனக்குக் கொடுத்திருப்பதற்காக நன்றி” என்று மெதுவான குரலில் அட்வென்டிஸ்ட் மிஷனிடம் தெரிவித்தார்.



நிகோரா தேவனை நம்பினாலும், இன்னும் தன் வாழ்க்கையை அவரிடம் அர்ப்பணிக்க வில்லை. அதற்கு ஒரு காரணம், உஸ்பெகிஸ்தானில் பலர் செவந்த்–டே அட்வென்டிஸ்டுகளை மதத்தீவிரவாதக்கூட்டமாகப்பார்ப்பதாகும். தேவவல்லமையைக் கண்டும், ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறவர்களுக்கு ஜெபியுங்கள்.

*நிகோரா என்பது கற்பனை பெயர்.*